முருகப்பெருமான் துணை

**மகான் அத்திரிமகரிஷி அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**18.12.2023,** திங்கட்கிழமை

1. அன்னதான சேவை வளர்த்து
அகிலமெங்கும் பசிபிணி போக்க
அண்ணலாய் வந்த குருவரங்கா
அப்பனே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது சிலை திங்கள்
குறைவிலா உபய திகதி சோமவாரம்
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 02 ம் நாள், 18.12.2023, திங்கட்கிழமை)
தெரிவிப்பேன் துல்லிய ஆசிதனை
தேசிகன் கேட்க அத்திரிமகரிஷி யானும்
3. யானும் உலகநலம்பெற உரைப்பேன்
உண்மை நெறி சன்மார்க்க நெறியை
ஞானமாக அருளும் அரங்கனின்
ஞானவழிகளை நம்பி வர
4. வருகவே கருமவினை விலகும்
வறுமை விலகும் வசதி கூடும்
தருமசிந்தை பெருகி அன்னதானம்
தானாகச் செய்யும் ஆர்வம் கூடி
5. கூடியே தருமம் வளர்த்து
குவலயத்தில் வந்த நோக்கம்
இடரின்றி புரிதல் கண்டு
இனி ஏன் பிறப்பெடுக்க வேணும்
6. வேணும் எனும் கேள்வி எழுந்து
விடைதேடி பிறவா நிலைக்கு
ஞானமும் தானமுமே வழியென
நம்பகத் தன்மை உருவாகி

7. உருவாகி அரங்கமகான் வழியே
உயர்வழியென உணர்ந்து நன்கு
குருவாக அரங்கனை ஏற்று
குடிலாம் ஏழாம்படைவீடு நோக்கி

8. நோக்கியே உலகமக்கள் வர
நிலவுலகில் எங்கும் அரங்கன்
ஆக்கம் ஊக்கம் கொண்ட
ஆன்மீக வழிவந்த ஞானவான்களாக

9. ஆகவே உலகோரை மாற்றி
அற்புதம் அரங்கனால் நடக்கும்
வகைபட சக்திநிலை கூடி
வருங்காலம் அறியும் உணரும்

10. உணரும் ஞானபலம் கூடி
உயர்வான ஞானப் படைகளாக
ஞானயுகம் படைக்கும் சக்திகளாக
ஞானிகள் ஆசி பெற்றவர்களாக

11. ஆகவே எங்கும் பலம் கூடி
அற்புதம் உலகினில் நடக்கும்
வகைபட சடுதி மாற்றமும்
வையகம் ஞானத்தலைமையாக அமையும்

துல்லிய ஆசி முற்றே

—சுபம்—